# ஜாமக்காரன்

# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 4 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 7**

**JULY 2020 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**

ஜாமக்காரன் JAMAKKARAN




கர்த்தருக்குள் அன்பானவர்களே !

யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு மாதமும் ஜாமக்காரன் பத்திரிகை இரண்டு மாதம் தாமதமாக வெளியிடுவதை குறித்து எனக்கும் மனதுக்கு திருப்தியாக இல்லைதான், **பெரிய அச்சகம்** கெரோனா தாக்கத்தால் மூடப்பட்டுவிட்டது. ஆகவே சிறியஅச்சகத்திலே அச்சிட்டு வெளியிடப் படுவதால் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அச்சிட முடிகிறது. பொறுத்துக் கொள்ளுங்கள். **பக்கங்கள் குறைத்து** அச்சிட்டால் **தமிழ் – மலையாளம்** இரண்டையும் சீக்கிரம் அச்சிட்டு அந்தந்த மாத பத்திரிகையை அதே மாதத்தில் தபாலில் சேர்க்கமுடியும்.

பலருக்கு அனுப்பப்படும் ஜாமக்காரன் சில ஊர்களில் தபால்காரரே LEFT என்று எழுதி எனக்கே திருப்பி அனுப்புகிறார்கள். தபால்காரர் வீடுகளுக்கு சென்று தபாலை கையில் கொடுக்க கொரோனா கிருமிக்கு பயப்படுகிறார்கள் என்று விசாரித்தபோது தெரியவந்தது. குறிப்பாக **பெங்களூரில்** உள்ள சுமார் 32 விலாசதாரருக்கு அவர்கள் தொலைபேசியில் அறிவித்ததால் உடனே Speed

# JULY - 2020

Postல் ஜாமக்காரன் பத்திரிகை அனுப்பிவிடுகிறேன். ஜாமக்காரனை உண்மையாய் விரும்பி படிப்பவர்களுக்காக எவ்வளவு செலவானலும் விவரம் அறிந்தவுடன் Speed Post ல் உஅனுப்பிவைத்து விடுகிறேன்.

இந்தியாவில் உள்ளவர்களும் உங்கள் e-mail ID எனக்கு e-mail மூலமாக அனுப்பினால் நாங்கள் ஜாமக்காரனை pdf மூலமாக உங்களுக்கு அனுப்பினால் அதை நீங்கள் பிரிண்ட்அவுட் எடுத்து அதை புஸ்தகமாக்கி வீட்டில் உள்ள யாவரும் போட்டியின்றி படிக்க உதவும்.

## இந்தியாவில் தமிழ்நாட்டில் தற்போதைய நிலை

குறிப்பாக படிப்பு விஷயத்தில் அரசாங்கம் ஒரு தெளிவில்லாமல் ஒவ்வொரு நாளும் விதவிதமான அறிக்கை வெளியிடுவதால் பிள்ளைகளின் மனநிலை பாதிக்கப்படுகிறது. ஒருநாள் Online வகுப்பு என்றார்கள். பிறகு **பொதிகை** TVவழியாக வகுப்பு என்று சிலர் கூறினார்கள். தமிழ்நாட்டில் கணக்கெடுப்பில் 6 லட்சம் **கிராம பிள்ளைகளின்** கையில் கைபேசியில்லை.(மொபைல்) இல்லை. இவர்களின் படிப்பின் கதி என்ன? **கொரோனா வாதை** எல்லாருடைய வாழ்க்கையையும் புரட்டி போட்டுவிட்து. பல விதங்களில் காய்கறி முதல் பலசரக்கு சாமான்கள் வரை பொருட்களை விலைக்கு வாங்கும்போது அந்த பொருட்களில் நம் பணம் மறைமுக வரியாக அரசாங்கத்துக்கு போய் சேருகிறது. நாம் கொடுத்த வரி பணத்தில் **நம் பிள்ளைகளுக்கு** மொபைலையும் லேப் டாப்பும அரசாங்கம் வாங்கி கொடுத்தால் என்ன ?

அனைத்து நீதிமன்றங்களிலும் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு, சிறைக்கு சென்றவரும் சுப்ரீம் கோர்ட்டு அவைகளை உறுதி செய்யும் கட்டத்தில் சிறையிலிருந்து எப்படியோ வெளியே வந்த முன்னால் முதல்வர் ஜெயலலிதா அவர்களுக்கு **மெரினாவில் ஞாபக சின்னம்** வைக்க **அரசாங்க பணத்தில்** பல கோடிகள் தண்ணீராய் இறைக்கும் இந்த அரசாங்கம் அநத் கோடிகளை ஏழை கிராம பிள்ளைகளுக்கு உதவி செய்யக்கூடாதா? ஒரு ஓட்டுக்கு 5000 ரூபாய் கொடுத்து கள்ள ஓட்டு போட வைத்து MLA, வாகவும் MP களாவும் பதவிகளை விற்கும் அரசாங்கம் ஜெயலலிதா ஞாபக சின்னத்திற்கு முதல் தவனையாக **50.8 கோடிகளை** சமாதிக்காக செலவிட்டிருக்கிறது. ஜெயலலிதா அவர்கள் குடியிருந்த **போயஸ் கார்டன் இல்லத்தை** நினைவு இல்லமாக்க முதல் தவனையாக **68 கோடிகளை** செலவு செய்கிறது. ஜெயலலிதா அவர்கள் **கட்ட தவறிய வருமான வரி பாக்கி 37 கோடி ரூபாய்பை** வருமானவரி துறைக்கு செலுத்த தமிழ்நாடு அரசாங்கம் அந்த கோடிகளை ஒதுக்கியுள்ளது. எல்லாம் சேர்த்து தோராயமாக மொத்தம் **105 கோடி** ரூபாய் ஒதுக்கியுள்ளது. இவைகள் யாருடைய பணம் நியாயமாக இந்த பணத்தை ஏன் AIADMK **கட்சி பணத்திலிருந்து** எடுத்து செலவு செய்ய கூடாது?

இந்த 105 கோடி ரூபாய்க்கு சுமார் **3 லட்சம் கிராம பிள்ளைகளுக்கு** மொபைலும் லேப்டாப்பும் வாங்கி கொடுத்து உதவலாமே! முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா

அவர்கள் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு, **சிறைக்கு** சென்றவராக இருந்தாலும் இன்று **அவர் உயிரோடு இருந்திருந்தால்** மிகப் பெரும் தொகையை தமிழ்நாட்டின் **அனைத்து பிள்ளைகளின்** ஆன்லை ன் படிப்புக்காக **பணத்தை அள்ளி கொடுத்திருப்பார்கள்** என்று நான் அறுதியிட்டு சொல்வேன்.

அன்று பள்ளிகூட பிள்ளைகளுக்காக ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் **அனைத்து மாணவ மாணவிகளுக்கும்** இருசக்கர வண்டி (சைக்கிள்) வாங்கி கொடுத்ததால்தான் இன்று **அனைத்து கிராம பிள்ளைகளும்** பஸ்சை எதிர்பார்க்காமல் பல மைல்கள் சைக்கிளில் பள்ளிக்கும் கல்லூரிக்கும் வந்து செல்லுகிறார்கள், இதை எந்த கட்சியாவது மறுக்க முடியுமா?, மற்ற அண்டை மாநில மக்கள் அனைவராலும் இந்த செயல் புகழ்ந்து போசப்படுகிறதே ! செல்வி ஜெயலலிதா அவர்கள் **நல்ல நிர்வாகி** என்று புகழப்பட்டார். இன்றைய தமிழ்நாட்டில் சரியானஅரசியல் தலைவர் இல்லாததால் **தலையில்லாத முண்டம்போல** இருக்கிறது. இப்போது ஆளுகிறவர்கள் தங்கள் **பதவி போய்விடக்கூடாதே** என்பதில்தான் தங்கள் முழு கவனத்தையும் செலுத்திக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலை எப்போது மாறுமோ என்று முழு தமிழ்நாட்டு மக்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த பயங்ரமான கொரோனா கிருமியினால் மரண பயம் கொண்டு மக்கள் பீதியில் இருக்கும்போது **குடும்ப கட்டுபாட்டுக்கு** அன்று ஆள் பிடிப்பார்கள். அதுபோல் சுகமாக நன்றாக இருக்கும் நபர்களையும் அவர்களுக்கு **கொரோனா** என்று **பொய் சொல்லி** அவர்களை கொரோனா வார்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு வைத்திய துறையில் இல்லாத வெளி ஆட்களை ஏஜென்டாக நியமித்து ஒரு ஆம்புலன்ஸில் ஆட்களை ஏற்றிச்செல்ல தெரு தெருவாக அலைகிறார்கள் என்று கேள்விபடுகிறோம். காரணம் ஒரு **கொரோனா** வியாதியஸ்தனுக்கு அரசாங்கம் சுமார் 35,000 ரூபாய் செலவிடுகிறது, அந்த பணத்தையும் பங்கு போட்டு ஏப்பமிடும் MLA, மந்திரிமார்கள் இப்படிப்பட்ட ஆட்களை ஏவிவிட்டுக்கொண்டே இருக்கிறார்கள. அரசாங்க பணம் எந்தெந்தவிதத்தில் களவாடப்படுகிறது பார்த்தீர்களா!

## கிறிஸ்த சபைகளிலும் இதே ஊழல்தான்

☐ கிறிஸ்தவத்தில் மட்டும் என்ன யோக்கியம் இருக்கிறது. தமிழ்நாட்டு CSI பிஷப் ஒருவர் **தன் மகன்** செய்த தவறுக்காக **டையோசிஸ் பணத்தை** எடுத்து அவன் செய்த **பாவத்தை மூடிமறைக்க** பல லட்சங்கள் **லஞ்ஜமாக** அடிக்கடி கொடுத்து கொண்டிருக்கிறார். பிஷப்புகளுக்கு மேல் அதிகரியாக இருக்கும் **மாடரேட்டர்** அவர்கள் நீதி மன்றத்தில் சுமார் **7 கோடி ரூபாய்** ஊழல் செய்தது நிரூபிக்கப்பட்டு அந்த அபராத பணத்தை ஒரு வாரத்தில் நீதிமன்றத்தில் அடைக்க கட்டளையிட்டது. அந்த பணத்தை **டையோசிஸ் நிதியிலிருந்து** எடுத்து கொடுக்க பிஷப் முயன்றபோது டையோசிஸ் நிர்வாக குழு **நீங்கள்** செய்த **ஊழல் பாவத்துக்கு** அந்த **அபராத தொகை 7 கோடிகளையும்** உங்கள் சொந்த பணத்திலிருந்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று நிர்வாகிகள் டிவாதமாக கூறிவிட்டார்கள்.

நீதிமன்ற 1 வார கெடு முடிந்துவிட்டபடியால் பிஷப்பை (மாடரேட்டரை) ஏன் இன்னும் கைது செய்யாமல் இருக்கிறார்கள் என்று நிதிமன்றம் **கேரள கவர்ன்மெண்ட்டைக்** கண்டித்தது. உடனே போலீஸ் **பிஷப் வீட்டிற்குள் நுழைவதை** கேரள மலையாள TV யான 7x24 TV **சேனலில்** காட்டினார்கள்.

## திருநெல்வேலி C.S.I. டையோசிஸ் பற்றிய செய்தி



**Modarator**
**Most Rev. Dharmaraj Rasalam**

☐ இதே பிஷப் மாடரேட்டர் Most Rev. தர்மராஜ் ரசலம் அவர்கள் திருநெல்வேலி CSI டையோசிஸ் பணத்தை, சொத்துக்களை நிர்வகிக்க பொருளாளராக பலமுறை ஊழல்செய்து சிறைக்கு சென்றவரும் குற்றவாளி என்று திர்ப்பு கூறப்பட்ட திரு. T.T. பிரவீன் என்பவரை நியமித்தார். இப்போது திருநெல்வேலி CSI டையோசிஸ் நீதிமன்ற நிர்வாகத்தின் கீழ் இருப்பதால் கனம் நீதிபதி ரிஷிவர்மன் அவர்கள் மாடரேட்டர் பொருளாளராக ஏற்பாடு செய்த T.T.பிரவீனை நீக்கி உத்திரவிட்டு நீதிபதி அவர்களே ஓய்வுபெற்ற உயர் போலீஸ் அதிகாரியான திரு. ஜெயசந்திரன் I.P.S. அவர்களை (Treasurer) பொருளாளராக மாடரேட்டர் அவர்கள் நியமித்த நபர் தவரானவர் என்று நீதிமன்றம் கூறியது இது மாடரேட்டர் அவர்களுக்கு மற்றொரு பின்னடைவும், அவமானமும் ஆகும். இந்த அறிக்கை ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் இந்த ஜாமக்காரனை எழுதும்போது வெளிவந்தது. திருவனந்தபுரம் CSI மெடிக்கல் காலேஜ் பணம் 7 கோடி ஊழல் செய்ததுபோல் திருநெல்வேலி டையோசிஸ் பணத்திலும் கைவைக்க தனக்கு சாதகமான ஒரு மலையாள நபரை நியமித்தது பெரிய சாட்சி கேடாகும்.

எங்கும் ஊழல் எதிலும் ஊழல் எப்படி இவர்கள் மனசாட்சி இல்லாமல் ஊழியம் செய்கிறார்களோ தெரியவில்லை. கர்த்தர்தான் நம் தேசத்தையும் குறிப்பாக நம் தமிழ்நாட்டையும், நம் கிறிஸ்தவ சபைகளையும் காப்பாற்ற வேண்டும். இவர்கள் யாவரும் கொரேனா கிருமியைவிட **மிக பயங்கரமானவர்கள்** என்று கூறத் தோன்றுகிறது.

வாசகர்கள் அனைவரையும் கர்த்தர் காப்பாராக !

மேலே கூறியதை குறித்து விளக்கமாக புகைபடத்துடன் ஆகஸ்ட் மாத ஜாமக்காரனில் கர்த்தர் என்னை அனுமதித்தால் வெளியிடுவேன். ஜெபிப்போம் – ஜெபிக்கிறேன்.

☐ உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது. அதிலிருந்து நியாதிபதிகளின் முகத்தை மூடிக்போடுகிறார். யோபு. 9:24

☐ மனுபுத்திரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்போது துன்மார்க்கர் எங்கும் சுற்றி திருவார்கள். சங். 12:8

**Dr. புஷ்பராஜ்**



# உபவாச ஜெபம் எப்படி செய்வது ?

**குறிப்பு :** *உபவாசத்தை குறித்து என் சொந்த வாழ்க்கையில் 1965 வருடம் முதல் நான் கைகொண்ட அனுபவபூர்வமான விஷயத்தையும் அதன்பின் நான் வேதத்தை தொடர்ந்து படிக்க படிக்க வசனம் மூலமாக நான் கற்றுக்கொண்ட வசன அடைப்படையிலான அனுபவங்களைத்தான் என்வாசகர்களுக்காக கீழே நான்எழுதியுள்ளேன்.*

*வேத புத்தகம் அல்லாது வேறு எந்த ஒரு புத்தகத்தையம் வாசித்தோ மற்றவர்களிடம் கேட்டோ இவைகளை நான் எழுதவில்லை. நான் எழுதிய விவரங்கள் யாவும் வசன அடிப்படையில் இருக்கிறது என்று நீங்கள் அறிந்தால் மட்டும் என் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுங்கள்.*

*மற்ற ஊழியர்களும் தங்கள் அனுபவத்தைத்தான்பகிர்ந்து கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் அனுபவம்* ***புதிய ஏற்பாட்டு*** *வசனத்தின் அடிப்படையில் இல்லை. அதனால்தான் உபவாச விஷயத்தில் வாசகர்களாகிய உங்களை மட்டும் எச்சரிக்கிறேன். குறிப்பாக நீங்கள் என் ஜாமக்காரன் வாசகர்களாக இருந்தாலும் நீங்கள் மனம் திரும்பி இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றிருந்தால் மட்டுமே என் கருத்தை – வசனத்தோடு ஒப்பிட்டு ஏற்றுக்கொள்வீர்கள்.*

## ஜெபத்தில் இரண்டு வகை உண்டு

**1) சாதாரண ஜெபம்** 2) **உபவாசம் செய்து ஜெபிக்கும் ஜெபம்**

இரண்டு ஜெபத்தையும் ஒரே தெய்வம்தான் கேட்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட பிசாசுகள் (பிரச்சனைகள்) **உபவாசத்தாலும்** ஜெபத்தினாலும் அல்லாது ஒருபோதும் நீங்கி போகாது என்றார்.

நம் வாழ்வில் ஜெபித்தும் **பதில் கிடைக்காத** அல்லது ஜெபித்தும் **நீங்காத பிரச்சனைகள்,** தடைகள் இவற்றிற்கு **உபவாசித்து ஜெபித்தால்** நீங்கள் ஜெபத்தில் கேட்டது கர்த்தருக்கு சித்தமானால் நிச்சயம் மாறும் அல்லது கிடைக்கும்.

☐ ஆனால் அந்த **உபவாச ஜெபம் செய்வதற்கு** சில ஒழுங்கு முறைகள் உண்டு. **வேலை செய்துகொண்டே** உபவாசம் எடுக்கக்கூடாது. ஒருவேளை **அலுவலகத்தில்** வேலை செய்பவர்கள் **பள்ளிக்கூடம்,** கல்லூரிகளில் **ஆசிரியராக** வேலை செய்பவர்கள் **உபவாசம்** செய்துகொண்டே தங்கள் வழக்கமாக செய்யும் வேலையிலும் ஈடுபடுவார்கள். அது தவறான ஜெபம் ஆகும். ஒரு சிலர் சடங்காசாரமாக உபவாசிப்பார்கள். சிலர் **வெள்ளி**

**தோறும் உபவாசம்** எடுப்பது என் **குடும்ப பழக்கம்** என்பார்கள். அப்படி செய்வதற்கு பெயர் **உபவாசம்** (Fasting) அல்ல. அதற்கு பெயர் பட்டினி (Starving) புறமதஸ்தர் சிவராத்திரிக்கு பட்டினி கிடப்பதுபோல அர்த்தம் ஆகும். ஏசா. 58:3 அன்றியும் நீங்கள் **உபவாசம்** செய்யும்போது உங்கள் **சொந்த வேலைகளையெல்லாம்** செய்கிறீர்களே ! என்று கர்த்தர் கூறுகிறார். அதன் அர்த்தம் அப்படிப்பட்ட ஜெபத்தை நான் அங்கீகரிப்பது இல்லை என்பதாகும். மத்தேயு 6ம் அதிகாரத்தில் இயேசு நீங்கள் **உபவாசம் செய்யும்போது** உங்கள் **அறையை மூடி** ஜெபிக்கும்படி ஆலோசனை கூறுகிறார். அதாவது வெளியில் எங்கும் போகக்கூடாது என்கிறார்.

சில ஊழியர்கள் பெருமையோடு கூற கேட்டிருக்கிறேன். நான் **உபவாசம் செய்துகொண்டே** பிரசங்கித்தேன். கர்த்தர் அன்று **வல்லமையாக** கிரியை செய்தார் என்பார்கள். அது **தவறான உபவாசம் ஆகும்.** உலகத்தில் உள்ளவர்கள் **அலுவலகம்,** கல்லூரி, **பள்ளிக்கூடம்** இப்படி பல இடங்களில் வேலை செய்கிறார்கள். அப்படியேதான் **ஊழியர்கள்** செய்யும் ஊழியமும் **கர்த்தருக்காக செய்யும் அதிமுக்கிய வேலையாகும்.** ஆகவே அந்த ஊழியத்தையும் பட்டினியுடன் செய்யக்கூடாது.

ஊழியத்துக்கு **உபவாச ஜெபம்** மிக மிக முக்கியம்தான், ஆனால் அதை ஊழியத்துக்கு போகும் **முந்தைய நாளில்** அல்லது வேறு நாளில் வெளியே எங்கும் போகாது அறையில் இருந்து சாப்பிடாமல் கர்த்தரிடம் ஜெபிக்க வேண்டும்.

## காலை உபவாசம் செய்யக் கூடாது.

அநேக கிறிஸ்தவர்கள் குறிப்பாக பெண்கள் **காலை ஆகாரம்** சாப்பிடாமல் அதை உபவாசம் எனக் கூறிக்கொள்வார்கள். நான் தினம் காலை சாப்பிடாமல் உபவாசம் செய்கிறேன் என்பார்கள். மனதில் ஜெபித்துக்கொண்டே என் வேலைகளை செய்கிறேன் என்பார்கள், அது தவறு. அப்படி செய்வது வயிற்றுக்கு கேடு விளைவிக்கும். வெள்ளைக்காரர்கள் காலை உணவை (நாஷ்டா) Break fast என்பார்கள். அதாவது (Fasting கை Break செய்வது) உபவாசத்தை நிறுத்துவது என்பதுதான் அதன் அர்த்தமாகும். அதாவது முதல் நாள் இரவு 8-00 மணிக்கு சாப்பிட்டால் மறுநாள் காலை 8-00 மணி வரை **12 மணிநேரம்** வயிறு காலியாக இருக்கும். காலை உணவு சாப்பிடாமல் போனால் வயற்றில் **அமிலம் சுரக்க ஆரம்பித்துவிடும்.** வெரும் வயிற்றில் அமிலம் சுரந்தால் **வயிற்றெரிச்சல் நெஞ்செரிச்சல்** போன்ற வயிற்று பிரச்சனைகள் உருவாகும். நாளடைவில் அதுவே **வயிறுபுண்** உண்டாக காரணமாகிவிடும். ஆகவே உபவாச ஜெப நாட்களில் காலையில் அரிசி கஞ்ஜி, இட்லி (பன்) ரொட்டி போன்ற லகுவான உணவு உண்டு அதன்பின் ஜெபிக்க சென்றுவிட வேண்டும். **மதியம் சாப்பாடு சாப்பிட கூடாது.** அன்று **பகல் முழுவதும்** ஜெபித்து மாலை அல்லது **இரவு** லகுவான உணவு சாப்பிட்டு உறங்கசெல்ல வேண்டும். **வெறும் வயிற்றோடு** படுக்க செல்லவும் கூடாது. இப்படிப்பட்ட உபவாச ஜெபத்தை **ஒரு பகல் உபவாச ஜெபம்** என்பார்கள். அப்படியே **இரவு நேர** உபவாசமும் செய்ய கூடாது.

## எப்படிப்பட்ட உபவாசம் ஜெபம் செய்யகூடாது !

40 நாள் 30 நாள் 15 நாள் 7 நாள் ஆகிய இப்படிப்பட்ட உபவாசம் **புதிய ஏற்பாட்டு சபைக்கு** கொடுக்கப்படவில்லை. அவைகள் யாவும் **பழைய ஏற்பாட்டு சடங்குகளாகும்**. லூக் 18:10 வசனத்தில் இரண்டு பேர் ஜெபம் பண்ண தேவாலயத்துக்கு சென்றார்கள். ஒருவன் பரிசேயன் மற்றவன் ஆயக்காரன் ( வரி வசூலிப்பவன்). பரிசேயன் கூறுகிறான். ஆண்டவரே நான் அந்த ஆயக்காரனைபோலல்ல நான் வாரத்தில் **இரண்டு நாள் உபவாசிக்கிறேன்.** தசம பாகம் கொடுக்கிறேன் என்றும் **நியாயபிரமான** காலத்தில் சொல்லப்பட்ட **சடங்குகளை** எல்லாம் செய்கிறேன் என்கிறான். ஆகவே ஆயக்காரனை அல்ல என்னைதான் நீர் ஆசீர்வதிக்கவேண்டும் என்று மறைமுகமாக குறிப்பிடுகிறான். ஆனால் ஆண்டவர் **சடங்குகளை கைகொள்ளுகிறவனை அல்ல** ஆயக்காரனைதான் ஆசிர்வதித்தார். வாரத்தில் **இரண்டு நாள் உபவாசம்** என்ற சடங்கு அன்று நியாய பிரமான காலத்தில் இருந்தது, அதை நான் ஒழுங்காக செய்கிறேன் என்று கூறி அவன் ஜெபிக்கிறான்.

ஆகவே **சடங்காச்சாரமான** இப்படிப்பட்ட உபவாசங்களை இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட விசுவாசிகளான நாம் பின்பற்றக் கூடாது. சிலர் கூறுவார்கள் இயேசு கிறிஸ்து **40 நாட்கள்** வனாந்திரத்தில் உபவாசித்தார் என்ற புதிய ஏற்பாட்டில் எழுதியிருக்கிறதே என்று சிலர் சுட்டிக்காட்டுவார்கள். இது இயேசு கிறிஸ்து மரிக்கும்முன் வாழ்ந்த காலம் நியாயமான காலமாகும். அதையும் இயேசுவாக உபவாசிக்க போகவில்லை. ஆவியானவர்தான் இயேசுவை கூட்டிக்கொண்டு போனார், காரணம் பிசாசை தேற்கடிக்கவும் அன்றைய சூழ்நிலையில் மனிதனாக வாழ்ந்த காலத்தில் **நியாயபிரமான சடங்குகளுக்கு** இயேசு கிறஸ்து எதிரானவர் அல்ல என்பதை காண்பிக்கவும் ஆவியானவர் வனாந்திரத்துக்கு அழைத்து சென்றதாக வாசிக்கிறோம். ஆகவே இயேசு 40 நாட்கள் உபவாசம் செய்தார் என்பதற்காக நாம் யாரும் 40 நாள் உபவாசம் செய்யக் கூடாது.

## மோசே செய்த 40 நாள் உபவாச ஜெபம்

பழைய ஏற்பாட்டில் தேவ மனிதர்கள் பலர் 40 நாள் உபவாசம் கைக்கொண்டார்கள். மோசே மலையில் 40 நாள் உபவாசம் செய்தார். அப்பமும் புசிக்கவில்லை, தண்ணீரும் குடிக்கவில்லை. அப்படியே கர்த்தரோடு பேசிக்கொண்டிருந்தார். அது கர்த்தர் தந்த விசேஷ பெலத்தால் தண்ணீர்கூட குடிக்காமல் 40 நாட்கள் கர்த்தரோடு பேச முடிந்தது. அப்படிப்பட்ட கடின உபவாசத்தை எந்த ஊழியக்காரரும் விசுவாசிகளும் செயல்படுத்த அல்லது பின்பற்ற முயற்சி செய்ய கூடாது.

அப்படிப்பட்ட கடுமையான 40 நாள் உபவாசம் செய்வதால் சுகம் அளிக்கும் வரம். தீர்க்கதரிசனம் வரம் கிடைக்கும் என்றும், குறிப்பாக பரிசுத்த ஆவியானவரின் நிறைவு கிடைக்கும் என்றும் அப்படிப்பட்ட உபவாசம்தான் பிசாசுகளை துரத்த முடியும் என்றும் மிக தவறாக உபதேசிக்கிறார்கள். **அது கள்ள உபதேசம்** ஆகும். மேலும் அது **நியாய பிரமான கால சடங்குகளாகும்.**

இயேசு மரித்து உயர்த்தெழுந்து பரமேறி சென்றபின்தான் **புதிய ஏற்பாட்டு சபை** ஆரம்பிக்கிறது. **புதிய ஏற்பாட்டு சபையில்** எந்த சீஷனும் , அல்லது எந்த சபையும் 40 நாள் அல்லது 30 நாள் உபவாச ஜெபம் செய்ததாக நாம் வேதத்தில் எங்கும் வாசிக்க முடியாது. இன்றைய கிறிஸ்தவர்கள் **மார்டின் லூத்தர்** காலத்துக்கு பின் உருவாகிய புரோடஸ்டன் சபையாக ஆராதிக்க தொடங்கிய பின்னும் **கத்தோலிக்க சபையின்** பாரம்பரிய **சடங்குகளை** தொடர்ந்து இன்றுவரை கைகொண்டு வருகிறார்கள். குறிப்பாக இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட **பெரிய வெள்ளி** (Good Friday) கிழமைக்கு முன் 40 நாட்கள் **லெந்து** நாட்கள் அல்லது ஒடுக்க நாட்கள் என்று கூறி **சாம்பல் புதன் கிழமையிலிருந்து** பெரிய வெள்ளி கிழமை வரை 40 நாட்கள் ஒடுக்க நாட்களாக அனுஷ்டிக்கிறார்கள் CSI, லூத்தரன் மார்தோமா போன்ற **மெயின்லைன் சபைகள்** மாத்திரம் இந்த 40 நாட்களும் **நோம்பு நாட்களாக** அனுஷ்டிக்கிறார்கள். இது புதிய ஏற்பாட்டு சபைக்கு கற்பிக்கப்பட்ட உபதேசமல்ல.

குறிப்பிட்ட அந்த **லெந்து கால** 40 நாட்களில் பெரும்பாலான கிறிஸ்தவர்களின் வீட்டில் **இறைச்சி,** மீன் போன்ற அசைவ ஆகாரங்கள் சாப்பிடாமல் இருப்பார்கள். பெரும்பாலானவர்கள் இந்த 40 நாட்களில் காலை ஆகாரத்தை மட்டும் சாப்பிடாமல் இருந்து அதை **ஒருசந்தி** என்பார்கள். தமிழ்நாட்டில் சிலர் தலைக்கு பூ வைக்கமாட்டார்கள், முகத்துக்கு பவுடர் போடமாட்டார்கள், வேறு எந்த அலங்காரமும் செய்யமாட்டார்கள்.

இவைகளெல்லாம் **புறம்பான ஒடுக்கங்கள்** ஆகும். கர்த்தர் இவைகளை வெறுக்கிறார். அதனால்தான் **யோவேல் தீர்க்கதிரிசி** மூலமாய் கர்த்தர் கூறுகிறதாவது உங்கள் **வஸ்திரங்களை அல்ல** உங்கள் **இருதயத்தையே கிழித்து** போடுங்கள் என்கிறார்.

ஆகவே நாம் சரிபடுத்த வேண்டியது உங்கள் ஜீவியத்தை என்று கர்த்தர் கூறுகிறார். நீங்கள் இறைச்சி மீன் சாப்பிடாமல் அல்லது தலைக்கு பூ வைக்காதிருந்ததால் ஒரு அசீர்வாதமும் பெற்றுக் கொள்ளபோவதில்லை. இது **புறம்பான ஒடுக்கம்** சரிபடுத்த வேண்டியது உன் இருதயம் ஆகும்.

இயேசு மத் 6:17ல் கூறுவதை கவனியுங்கள். நீ **உபவாசிக்கும்போது** தலைக்கு **எண்ணெய்** பூசி, **முகம் கழுவி** என்று ஒரு விதமான மேக்கப்பையே கூறுகிறார். காரணம் மற்றவர் பார்வைக்கு நீங்கள் சாப்பிடாமல் இருப்பதால் **முகம் வாடலாய்** காணப்படும். அது உன்னை காட்டிக்கொடுத்துவிடும். அதனால் ஏன் முகம் வாடலாக இருக்கிறது சாப்பிடவல்லையா என்று மற்றவர்கள் கேட்க நேரிடும். நீங்கள் சாப்பிடவில்லையா? என்று கேட்டால் நீ பொய் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும். ஒருவேளை நான் இன்று **உபவாசம்** என்று கூறினால் அது உன்னை பெருமைப்படுத்தும். நீ மிகவும் ஆழமான பக்தியானவர் என்று உன்னை பறை சாற்றும்.

☐ ஒரு பெந்தேகோஸ்தே சபையில் ஒரு ஞாயிறு ஆராதனையில் சபை வாசலில் ஒரு போர்டு எழுதி வைத்திருந்தார்கள். நம் பாஸ்டர் **30 நாட்கள் உபவாசத்தில்** இருக்கிறார். அவரை யாரும் தொல்லை படுத்தவேண்டாம். உதவி பாஸ்டரிடம் தொடர்பு கொள்ளவும் என்று எழுதியிருந்தது. இது அநத பாஸ்டரை மிகவும் பக்தியானவராக விளம்பரம் செய்யும்.

☐ ஒரு பத்திரிகையில் இப்படி எழுதியிருந்தது. சகோதரன் அவர்கள் கொரோனா ஒழிந்து போக **40 நாட்கள் உபவாசம்** எடுக்கிறார். ஆனால் தசமபாகம் காணிக்கையை வழக்கம்போல அனுப்பவும் என்று எழுதியிருக்கிறார். இதுவும் அவரை பக்திமானாக காட்டும் வெறும் விளம்பர அறிவிப்பு ஆகும். மேலே குறிப்பிட்ட அந்த சபை பாஸ்டரும் அந்த பத்திரிகை நடத்தும் ஊழியரும் **விளம்பர பிரியர்கள்.** தாங்கள் மிகவும் பரிசுத்தவான்களைப்போலவும் **40 நாள் உபவாசம்** செய்தால் கடவுளுக்கு தான் மிகவும் நெருங்கினவராக காண்பிக்க உதவும், மேலும் உபவாசம் முடிந்தபின் இந்த ஊழியர்கள் மிகப்பெரிய **வல்லமை** பெறுவார்கள் என்று முட்டாள் ஜனங்களை நம்பவைக்க இவர்கள் இப்படிப்பட்ட வேஷம் போடுகிறார்கள். இயேசு இவர்களை (மத். 6:16) **மாயக்காரர்** Hypocrites என்று அழைக்கிறார்.

**சத்தியம்** TVயில் சகோ. மோகன் C லாசரஸ்சும் மேடையில் உள்ள பெரிய பெரிய ஊழியக்கார்களும் **40 நாள் உபவாச ஜெபம்** என்று அறிவித்து **கொரோனா கிருமியை** அழிப்பதற்கு ஜெபம் ஏறெடுத்தார்கள். அதேபோல சகோ. மோகன C லாசரஸ் அவர்கள் திருநெல்வேலியில் உள்ள சில இடங்களை **தேரிக்காடு** என்று கூறுவார்கள். அப்படிப்பட்ட இடத்தில் **கருவேலமரம்** நிறைந்த **முள்ளுகாட்டில் 3 மணிநேரம்** தொடர்ந்து **அன்னிய பாஷையில்** பேசி ஜெபித்தபின் **என் மனபாரம்** எல்லாம் நீங்கியது என்றார். **தாய் பாஷையில்** கர்த்தரிடம் இரண்டு நிமிடம் பேசி ஜெபித்து கிடைக்க வேண்டிய சந்தோஷத்தையும், ஆறுதலையும் **தேரிகாட்டில் 3 மணி நேரம்** அவருக்கும் புரியாத **அன்னிய பாஷையில்** பேசியதால் ஆறுதல் கிடைத்ததாக இவர் தன்னைத்தான் திருப்திப்படுத்திக்கொள்கிறார். அல்லது தன்னைத்தான் ஏமாற்றி கொள்கிறார். இதில் ஆபத்து என்னவென்றால் இவர் 3 மணிநேரம் ஜெபித்து தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்ளட்டும்.

**பத்திரிகை** மூலமாக **TV மூலமாக** 3 மணி நேரம் ஜெபிக்கவும் 40 நாள் உபவாசிக்க வேண்டும் என்று எழுதியும், பேசியும் ஏன் **பொதுமக்களை** தூண்டவேண்டும். இது பாவம் அல்லவா! 1 போது 5:7ல் **அவர் உங்களை விசாரிக்கிறவர் ஆனபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்** என்றல்லவா வேதம் நமக்கு போதிக்கிறது. **3 மணி நேரம்** அன்னிய பாஷையில் பேசியா **மனபாரத்தை இறக்கவேண்டும்**? இந்த உபதேசம் எத்தனை பேர்களை கெடுக்கும்.

இவர் ஆலோசனையை கேட்கம் பாமர மக்களின் வீட்டின் பிரச்சனை நீங்க பில்லி சூன்யம் நீங்க நாமும் **40 நாட்கள்** உபவாசிப்போம் என்று தீர்மானித்தால் எத்தனை பேர் சரீரம் கெட்டு, சரீரத்தில் தண்ணீர்வரண்டு சரீரமே பெலன் இழுந்து போகுமே !

**சுவர்** இருந்தால்தானே **சித்திரம்** வரைய முடியும் நம் உடல் ஆரோக்கியத்தோடு இருந்தால்தான் நாம் நம் **குடும்பத்தை** நடத்தமுடியும், **ஊழியத்தையும்** செய்ய முடியும்.

☐ **40 நாட்கள் உபவாசத்தில்** இருந்த ஒரு பாஸ்டரை நேரில் சந்திக்க சென்னை சென்றேன். அவர் பிள்ளைகள் இது அப்பாவுக்கு 5வது நாள் உபவாச நாள் ஆகும் என்றார்கள். நான் அறைக்குள் சென்றேன். படுக்கையில் படுத்துக்கொண்டிருந்த பாஸ்டரை அவர் பிள்ளைகள் அப்பா டாக்டர் வந்திருக்கிறார் எனக் கூறி அழைத்தார்கள். மெதுவாக அவர்

கண் திறந்து பார்த்தார். ஒரு சிறிய சிறிப்பை எனக்காக சிறித்து கை கூப்பினார். ஆனால் பிரைஸ் த லார்ட் டாக்டர் என்று கூறகூட அவருக்கு வாயில் சத்தம் வரவில்லை. என்ன பரிதாபம் ! இது அரசியல்வாதிகள் **சாகும் வரை உண்ணாவிரதம்** என்று கூறுவார்களே அதற்கு சமமாகும். அதன்பின் அவர் பிள்ளைகள்தான் என்னிடம் பேசினார்கள். அப்பா இப்படி 5 வருடத்துக்கு ஒரு முறை 40 நாள் உபவாசம் எடுப்பார். என்னமோ இந்த முறைதான் அவரால் 5 வது நாளே பேச முடியாத அளவு பலவீனமாகிவிட்டார் என்றார்கள்.

**உபவாசம் எடுப்பதே ஜெபம் செய்வதற்காகத்தான்** 5வது நாளே **ஜெபிக்கமுடியாமல்** கண் மூடியவாரே **படுத்துகிடப்பதற்கா** 40 **நாள் உபவாசம்**! இது எத்தனை முட்டாள்தனம் ! ஒரு காரியம் நிறைவேற, நாட்டுக்கு நன்மை உண்டாக தன்னை தாழத்தி உண்மையான மன பாரத்தோடு சுமார் அரை மணிநேரம் தொடர்ந்து ஜெபித்தால் போதுமே!

யோ. 15:7ல் இயேசு கூறுகிறார், நீங்கள் எண்ணிலும் என் வசனம் உங்களிலும் இருந்தால் நீங்கள் வேண்டிக்கொள்வது எதுவோ அது உங்களுக்கு கிடைக்கும் என்று எளிய வழியில் ஜெபத்துக்கு பதில்பெற ஆலோசனை கூறினார். இப்படி 40 நாட்கள் பட்டினி கிடக்க இயேசு ஒரு இடத்திலும் கூறவில்லை.

## தனிப்பட்ட உபவாச ஜெபம்

ஒவ்வொரு விசுவாசிக்கும் ஊழியக்காரருக்கும் தனிப்பட்ட உபவாச நேரம் கண்டிப்பாக வேண்டும். அது எந்த நாளானாலும் உபவாசித்து ஜெபிக்கலாம். வெள்ளிக்கிழமை தோறும் உபவாசிப்பவர் உண்டு. கர்த்தர் எல்லா நாளுக்கும் ஆண்டவராக இருக்கிறார்.

வாரா வாரம் ஒரு குறிப்பிட்ட ஒரு நாளை தெரிந்துகொண்டு உபவாசிப்பது நல்லதுதான். ஆனால் அதுவே ஒரு **சடங்காக** அல்லது பழக்கமாகிவிடும். என்னை பொருத்தவரை எந்த ஒரு குறிப்பிட்ட நாளையும் தெரிந்தெடுத்து நான் உபவாசிப்பதில்லை. எப்போதெல்லாம் **என் தனிப்பட்ட** ஜெப நேரம், வேத வாசிப்பு ஆகியவைகளில் **ஆசை** குறையும்போது (Consentration) **மனதை ஒருநிலைப்படுத்த முடியவில்லையோ** அதை நான் அடையாளமாக வைத்துக்கொள்கிறேன். இந்த இரண்டு நிலையும் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தொடர்ந்தால் உடனே தாமதியாமல் உபவாசம் எடுத்து ஜெபிக்க ஆரம்பித்துவிடுவேன்.

நான் உபவாசம் எடுப்பது யாருக்கும் தெரியாது. அது ஊழிய நாட்களாய் இருந்தால் ஊழியம் தொடங்கும் நாளுக்கு முந்தைய நாளில் ஊழியம் நடக்கும் ஊருக்கு அருகே உள்ள சுமார் 40 மைல் தொலைவில் எங்கு தங்கும் விடுதி (லாட்ஜ்) இருக்கிறதோ அங்கு சென்று தங்கி வெளியே எங்கும் செல்லாது ஜெபித்து இழந்த அல்லது குறைந்த ஆவிக்குரிய உபவாச ஜெபத்தினால் நிலையை திரும்ப பெற்றுக்கொள்கிறேன்.

இந்த குறிப்பிட்ட ஆவிக்குரிய நிலையை 1965 வருடத்திலிருந்து தொடருகிறேன். நான் மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டது 1964ம் வருடம் ஆகும். அந்த ஆரம்ப நாட்களில்

இரட்சிக்கப்பட்டபோது எந்த பாவத்தை அறிக்கையிட்டு ஜெபித்தேனோ அதே பாவத்தில் திரும்ப திரும்ப விழுந்தேன். தனித்து சென்று அழுவேன், உடனே தெளிவு பெறுவேன். ஆனால் மறுபடியும் அதே பாவத்தில் விழுவேன். இப்படி எத்தனை காலத்துக்கு விழுந்து விழுந்து எழுந்திருப்பது? நிலையான ஆவிக்குரிய ஜீவியம் சந்தோஷம் அனுபவிக்க முடிய வில்லையே! இந்த லட்சணத்தில் பல இடங்களில் சாட்சியும கூறுவேன். சகோ. P. சாமுவேல் அவர்கள் (டேனிஷ்பேட்டை) **பெத்தேல் ஸ்தாபகர்** அவர்கள் என்னை அவர் கூட்டங்களில் அடிக்கடி உபயோகிப்பார், என்னை சாட்சி கூறுவதற்காக பல ஊர்களுக்கு அவர் பிரசங்கிக்கும் கூட்டங்களுக்கு அழைத்து போவார். மேடையில் சாட்சி கூறுவேன். கூட்டத்தில் உள்ளவர்கள் டாக்டராகிய நான் சாட்சி கூறுவதை கேட்டு சந்தோஷப்பட்டு என்னை மிகவும் கனப்படுத்துவார்கள். மிகவும் மரியாதை கொடுப்பார்கள். ஆனால் என்னில் **மாய மாலம்** நிறம்பி இருக்கிறதே ! அது என் மனதின் உள் மனசாட்சியை சித்திரவதைப்படுத்தியது சாட்சியின் ஊழியம் செய்தாலும் VBS டைரக்டராக பல இடங்களில் அழைக்கப்பட்டாலும் உள் மனசாட்சியில் நான் குத்தப்பட்டு நிம்மதியற்றவனாக இருந்தேன்.

மற்ற எல்லா தொழிலை காட்டிலும் மருத்துவ தொழிலில் சோதனைகள் மிக அதிகம். அதனால் என் ஜிவியத்தில் வெற்றி இல்லாமல் இருந்தேன். அந்த சமயத்தில்தான் உபவாச ஜெபத்தின் மகிமையைப்பற்றி அறியலானேன். ஆவியானவரே அந்த உபவாச ஆலோசனையை அறிய செய்தார். 1965ம் வருடம் ஜுலை மாதம் முதல் உபவாசித்து ஜெபிக்க தொடங்கிய நான் இப்போது என் 80வது வயதிலும் அந்த உபவாச ஜெபத்தை கைக்கொண்டு வருகிறேன். அதனால் என் ஆவிக்குரிய ஜீவியம் தளர்ந்து போகாதபடி என் தெய்வத்தோடு ஜெபிக்கும்போது ஜெபத்தில் குற்ற உணர்ச்சியில்லாதபடி ஆவிக்குரிய ஜீவயத்தில் சரீரத்திலும், ஆத்துமாவிலும் சந்தோஷமாக இருக்கிறேன்.

தாவீது கூறுகிறான் உபவாசத்தால் என் ஆத்துமாவை ஒடுக்கினேன் என்று எழுதியிருக்கிறான். இந்த மனித சரீரம் மோசமானது. இந்த மாம்ச சரீரத்தை வசனத்தின்படி கட்டுக்குள் கொண்டுவரவும் சரீரம் நாம் சொல்லுகிறபடி அடங்கவும் **உபவாச ஜெபம்** எனக்கு மிகவும் உதவினது.

## குடும்ப உபவாச ஜெபம்

அடுத்தது நம் குடும்ப பிரச்சனைகள் எதுவானாலும், பிள்ளைகள் பற்றியதானாலும் அவர்களின் திருமணம், படிப்பு யாவற்றிக்கும் கணவன் – மனைவியுமாக உபவாசித்து ஜெபிப்பது மிகவும் அவசியம். போதைக்கும், பாவத்துக்கும் அடிமையான பிள்ளைகளை **உங்களால் திருத்த முடியாது.** ஆனால் கர்த்தரால் திருத்த முடியும். பல குடும்பங்களில் மனைவி மாத்திரம் உபவாசிப்பது உண்டு. ஆனால் கணவன் சாப்பிட மட்டும் வருவார். உபவாச ஜெபத்துக்கு இணைய மாட்டார். இது குடும்ப சமாதானத்துக்கு ஆபத்தாகும். பெற்ற பிள்ளைகளைப்பற்றி எந்த பிரச்சனையானாலும் அது மனைவிக்கு மட்டுமே பொறுப்பல்ல, இருவரும் சேர்ந்து தான் அந்த பிள்ளைகளை பெற்றெடுத்து வளர்த்தினீர்கள். அந்த பிள்ளையின் பிரச்சனையில் தகப்பனுக்கும் பொறுப்பு உண்டு.

இயேசு சொன்னார் உங்களில் **இரண்டு பேர்** தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்த காரியத்தை குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோதகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும். மத். 18:19 என்றார்.

எங்கள் சொந்த வாழ்க்கையில் ஆரம்ப காலங்களில என் பிள்ளைகள் இரண்டு பேர்களுக்காகவும் அவர்கள் கல்லூரி படிப்புக்கு செல்வதற்க்குமுன் மனம் திரும்பின அனுபவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் கல்லூரியில் சேர்ந்தபின் அவர்கள் எந்த **காதல்** வலையிலும் விழாதிருக்கவும் கல்லூரியில் நல்ல **ஆவிக்குரிய நண்பர்கள்** கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் நாங்கள் இருவரும் ஒரு நாளை குறிப்பிட்டு அந்த நாளில் என் மனைவி கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில் வேலை செய்து கொண்டிருந்தபடியால் **ஒரு நாள் லீவ் எடுத்து,** அதே நாளில் நானும் என் ஆஸ்பத்திரிக்கு போகாமல் **சேலத்திலேயே ஒரு லாட்ஜில்** காலை 6-00 மணிமுதல் மாலை 6-00 மணிவரை அந்த அறையில் உபவாசித்து ஜெபிப்போம். வீட்டில் தொலைபேசி தொல்லை, வீட்டிற்கு ஜெபிக்க வரும் ஆட்கள் அதிகம், இப்படி ஏதாவது பல தடைகள் வீட்டில் ஜெபிக்கும்போது உண்டாகும் என்பதால் உள்ளூரில் வீடு இருந்தாலும் ஹோட்டலில் அறை எடுத்து ஜெபிப்போம். ஒருமுறை அல்ல, மாதத்தில் இரண்டு முறை அல்லது இரண்டு மாதத்துக்கு ஒரு முறை இப்படி நாங்கள் இருவர் மட்டும் கூடி ஜெபிப்போம். அதன் விளைவாக **என் மகள்** FMPB மிஷனரி ஸ்தாபனத்தார் வாலிப பெண் பிள்ளைகளுக்காக நடத்திய கூட்டத்தில் **இரட்சிப்பின் அனுபவத்தை** பெற்றாள்.

**மகன்** BYM சகோ. R. ஸ்டான்லி அவர்கள் திருச்சியில் நடத்திய 3 நாள் கூட்டத்தில் இரட்சிக்கப்பட்டார்.

எத்தனை சந்தோஷம் எத்தனை நிம்மதி, இது எங்கள் சாதாரண ஜெபத்தில் கிடைத்த வெற்றி அல்ல. இருவரும் இணைந்து உபவாசித்து ஜெபத்தபோது கிடைத்த ஆசீர்வாதம் ஆகும்.

இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் கனவனும், மனைவியும் இரட்சிக்கப்பட்டிருந்தால் மட்டும் சேர்ந்து ஜெபிக்கும் ஜெபத்தில் ஒன்றுபட முடியும். இரட்சிக்கப்படாத கணவன் அல்லது மனைவி ஆவிக்குரிய ஜீவியத்தில் அபிப்ராய வித்தியாசம் இருந்தால் இணைந்து ஜெபிக்க மனம் வராது அல்லது ஏதாவது மனஸ்தாபத்தோடு இருந்தாலும் அவர்களால் ஒருமனப்பட்டு ஜெபிக்க முடியாது. ஆகையால் இணைந்து ஜெபிக்கும் ஜெபத்துக்கு கணவனையோ – மனைவியையோ கட்டாயப்படுத்தி உபவாசம் செய்ய அழைக்க கூடாது விட்டுவிட வேண்டும். அவர்களுக்கே அதன் மேன்மை தெரிந்து அந்த உபவாச ஜெபத்தில் இணைந்தால் அந்த ஜெபம் சக்திபெரும், இவர்களுக்குள்ளும் சந்தோஷம் – சமாதானம் உண்டாகும்.

## சபையில் நடத்தும் உபவாச ஜெபம்

ஒவ்வொரு **சபையிலும்** வாரம் ஒரு நாளாவது **உபவச ஜெபம்** நடத்த வேண்டும். அதிலும் நாம் கலந்துகொள்ள வேண்டியது அவசியம். நான் தனியாக உபவாசித்தவிட்டேன்

என்றோ, என் கணவரும் நானும் வீட்டில் உபவாசித்து ஜெபித்து விட்டோம் என்றோ கூறி ஒதுக்கிவிடக்கூடாது.

சபை உபவாசமென்பது சபையில் உள்ள விசுவாசிகளுக்காக சபையில் இரட்சிக்கப்படாதவர்களுக்காக, பாஸ்டருக்காக, ஆயருக்காக, பிஷப், மாடரேட்டர், மிஷனரி ஊழியங்களுக்காக, மிஷனரி குடும்பங்களுக்காக, மிஷனரிகள் பெற்ற பிள்ளைகளின் படிப்பு, திருமணம் ஆகிய பல விஷயங்களுக்காக சபையாக சேர்ந்து ஜெபிக்க வேண்டும்.

யோவேல் 1:14ல் **பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள் ... மூப்பரையும்** (சபை மக்களையும்) உங்கள் தேவனாகிய **கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச்செய்து** கர்த்தரை நோக்கி கூப்பிடுங்கள், கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது... என்று கர்த்தர் அறிவித்திருக்கிறார். ஆகவே இப்படிப்பட்ட சபை உபவாசத்தில் தான் நம் தேசத்துக்காக, தேசத்தை ஆள்பவருக்காக, அதிகாரிகளுக்காக கொரோனா போன்ற வாதைகளுக்காக ஜெபிக்க வேண்டும்.

எசே. 22:30 நான் தேசத்தை அழிக்காதபடி திறப்பின் வாசலில் நிற்க வைக்கதக்கதாய் ஒரு புருஷனை தேடினேன் என்று கர்த்தர் கூறுகிறார்.

ஆகவே சபையில் உபவாச ஜெப கூட்டம் அவசியம் நடத்தப்பட வேண்டும். இப்படிப்பட்ட உபவாச ஜெப கூட்டங்களை சகோ. மோகன் C. லாசரஸ் TVயில் நடத்தும் உபவாச ஜெபங்களையோ, நாலுமாவடி திறப்பின் வாசல் உபவாச ஜெப கூட்டத்தையோ TVயில் இவர்கள் அழுது ஷோ காண்பிப்பதையும் அன்னிய பாஷையில் லபோ– திபோ என்று பேசுவது விக்கிரகத்தை ஆராதிக்கும் **புற ஜாதியார்** பார்க்கும்படி செய்யும் **விளம்பர ஜெபங்களை** கர்த்தர் ஒருபோதும் அங்கரீக்க மாட்டார். ஞானமில்லாமல் **அன்னிய பாஷை** என்ற பெயரில் உலக மக்கள் கிறிஸ்தவர்களை பயித்தியகாரர்களாக, நக்கலாக பேசும் அளவு செய்த இப்படிப்பட்ட ஏற்பாடுகளை யாரும் உற்சாகப்படுத்தா திருங்கள். இதில் சகோ. மோகன் C. லாசரஸ்சுக்கு கிடைக்கும் **ஆதாயம் ஏராளம்.** காணிக்கை **ஏராளம்.** அத்தனையும் சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களுக்கே சேரும் பயங்கர வியாபார யுத்தியாகும். தமிழ்நாட்டின் அனைத்து சபையின் பெரும்பாலான மக்களாலும் கவரப்பட்டுவிட்டார்.

இப்படிப்பட்ட விவரங்களையும் இந்த சமயத்தில் அறிவிப்பது என் கடமையாகும். மோகன் C. லாசரஸ்ஸின் இந்த வியாபாரம் **கேரளா,** கர்னாடகா, **ஆந்திரா** போன்ற பல மாநில பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு TV நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. **காணிக்கை** வசூலுக்காக முதலில் **கேரளத்தில்** TV நிகழ்ச்சி மூலம் கால்பதித்துள்ளார். கேரள மக்களுக்கும் இதை எச்சரிகையாக அறிவிக்கிறேன்.

## உபவாச ஜெபம் ஏறெடுக்கும்போது கைகொள்ள வேண்டிய சில ஒழுங்குகள்

தனி உபவாசமாகவோ குடும்பமாகவோ செய்யும் உபவாச ஜெபமாகவோ இருந்தால் முதலில் தொலைபேசி, கைபேசி யாவையும் ஆப் செய்து விட வேண்டும். வீட்டில் ஜெபித்தால்

வீட்டில் உள்ள மற்றவர்களுக்கு நீங்கள் ஜெபிக்க போவதை அறிவித்து வெளி நபர் யாராவது வந்தால் மாலை 6-00 மணிக்குமேல் அல்லது மறுநாள் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ள அறிவுறுத்துங்கள். இது எந்த தடையுமில்லாது அமைதியாக ஒருமனதோடு உபவாசிக்க உதவும். வீட்டில் ஜெபிக்கும்போது இப்படிப்பட்ட ஏற்பாடு மிகவும் அவசியம்.

உபவசித்து ஜெபிக்க சில ஒழுங்குகள் உண்டு. முதலில் எதற்காக ஜெபிக்க வேண்டும். அதன் பிறகு எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று வேதம் ஒரு ஒழுங்கை கற்பிக்கிறது. அதை கவனிக்கவும்.

எஸ்றா. 8:21 1) எங்களுக்காகவும்
2) எங்களை தாழ்த்துகிறதற்காவும்
3) எங்கள் பிள்ளைகளுக்காகவும்
4) எங்கள் சகல பொருள்களுக்காகவும்
5) செவ்வையான வழியை தேடுவதற்காவும்
உபவாசம் செய்ய கர்த்தர் கூறினார்.

**1) எங்களுக்காகவும் :** உபவாச ஜெபம் தனியாகவோ, குடும்பமாகவோ, சபையாகவோ, குழுவாகவோ ஜெபிக்க தொடங்கும்முன் உங்களை முதலில் தற்பரிசோதனை செய்ய வேண்டும். உங்கள் குறைகளை கண்டுபிடிக்க வேண்டும். கர்த்தரின் மனதை எந்தெந்த விதத்தில் வேதனைப்படுத்தியிருக்கிறோம் என்பதையெல்லாம் நினைத்து பார்த்து தற்பரிசோதனை செய்ய வேண்டும். உங்கள் **தனிப்பட்ட வாழ்க்கையில்** மன்னிக்கப்படாத பாவம் இருக்குமானால், குறைகள் இருக்குமானால் அப்படிப்பட்டவர்கள் **மற்றவர்கள் பாவத்தை** மன்னியும், உலக மக்கள் செய்யும் பாவத்தை மன்னியும் என்று கூற நமக்கு தகுதியில்லை. ஆகவே முதல் ஜெபம் **உங்களுக்காக** ஜெபிக்க வேண்டும். அந்த ஜெப நேரத்தில் கர்த்தாவே எங்கள் பாவத்தை எங்களுக்கு காட்டும் என்று கர்த்தரிடம் கேட்கவே வேண்டாம். உங்கள் பாவம் உங்கள் குறைகள் உங்களுக்கே தெரியுமே! தெரிந்ததை ஞாபகத்தில் வந்ததை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்டாலே போதும் ஞாபகத்தில் வராத பாவத்தை அல்லது குறைகளைப் பற்றி யோசிக்கவே வேண்டாம்.

## 2) எங்களை தாழ்த்துவதற்காக உபவாச ஜெபம்

**தாழ்ந்து போகாத** பிடிவாத குணத்தாலேயே பல குடும்பங்கள் உடைந்து விவாக ரத்து வரை போயிருக்கிறது.

சபை கமிட்டியில் யாராவது ஒருவர் தாழ்ந்து போயிருந்தால் பிரச்சனைகள் கோர்ட் வரை சென்று நாற்றமெடுத்த சாட்சியாக மாறியிருக்காதே! யார் முதலில் தாழ்ந்து போவது என்பதில் பலருக்கு பிரச்சனை, யார் சரியானபடி மனம் திரும்பி, கர்த்தரை சந்தோஷப்படுத்த ஆசைப்படுகிறார்களோ அவர்கள்தான் முன் மாதிரியாக தாழ்ந்து போக வேண்டும். அப்போதுதான் குடும்பம் உடையாமல் இருக்கும். சபையிலும் அந்த தாழ்மையை காண்பித்தால் சபை உடையாமல் இருக்கும்.

தாழ்மை உள்ளவனுக்கே கர்த்தர் கிருபை அளிக்கிறார்.

தன்னைத்தான் தாழ்த்துகிறவன் எவனோ அவன் உயர்த்தப்படுகிறான்.

கிறிஸ்துவே நமக்கு முன் மாதரியாகும். அவர் சிலுவையின் மரன பரியந்தம் தன்னை தாழ்த்தினார்.

என்னால் கோபத்தை அடக்க முடியவில்லை. தாழ்ந்துபோக முடியவில்லை அதனால் ஜெபத்தில் குற்ற உணர்ச்சியோடு ஜெபம் செய்ய முடியாமல் வேத புத்தகம் வாசிக்ககூட மனம் இல்லாமல் இருக்கிறேன். இந்த கோபம் தாழ்ந்துபோகாத குணம். இது என் குடும்ப பாரம்பரிய சுபாவம், அது என்னைவிட்டு போகாது என்று என்னை நான் ஞாயப்படுத்திக்கொள்கிறேன். ஆனால் வேதத்தின்படி அது தவறு என்று எனக்கு புரிகிறது என்று கூறுகிறவர்கள் ஏராளம். அப்படிப்பட்ட ஜென்ம சுபாவம் உள்ளவர்கள் உபவாசம் செய்து ஜெபித்தால்தான் அதை நம் இருதயத்திலிருந்து நீக்க முடியும். கிறிஸ்தவ வாழ்க்கையில் கிறிஸ்துவை போன்ற சாயலான மாற்றம் மிக மிக அவசியம் ஆகிறது.

## 3) பிள்ளைகளுக்காக பெற்றோர் உபவாசித்து ஜெபிக்க வேண்டும்

இதைக் குறித்து முன்னால் உள்ள பக்கங்களில் எழுதிவிட்டேன். வாலிப பிள்ளைகள் வளர வளர அவர்கள் சுபாவம் மாறும், அதிக சுதந்திரத்தை விரும்புவார்கள். அவர்களை கட்டாயப்படுத்தினாலோ கட்டளையிட்டாலோ அவர்கள் மிகவும் முரட்டாட்டம் செய்வார்கள். இரவு முழுவதும் மொபைல், வாட்ஸ்அப்பை நோன்டிக்கொண்டேயிருப்பார்கள். விடியற் காலையில்தான் தூங்குவார்கள், அவர்களை அவர்களை காலை எழுப்பினால் அவர்களுக்கு கோபம் வரும். முன் அன்பாக பேசிய பிள்ளைகள் இப்போது முரட்டுதனமாகவும் நடந்துகொள்வார்கள். அம்மா, அப்பா என்ற பாசம், மரியாதை எல்லாம் அவர்களை விட்டுபோய்விடும். நீங்கள் ஆலோசனை கூறினால் அவர்களக்கு கோபம்தான் வரும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கர்த்தாவே எங்கள் பிள்ளைகளுடன் எப்படி பேசுவது? அவர்களை எப்படி திருத்துவது? எங்களுக்கு தெரியவில்லை! இன்று நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்காகவே உபவாசிக்கிறோம், எங்களுக்கு பிள்ளைகளோடு பேசுவது எப்படி என்பதைக் கற்றுத் தாரும் ஆண்டவரே! எங்கள் பிள்ளைகளை **கெட்ட நண்பர்களிடமிருந்து** விடுவிடுத்து தாரும் ஆண்டவரே ! என்று **உபவாசித்து** ஜெபித்தாலே போதும் ஆவியானவர் மூலமாக பிள்ளைகளுடன் உள்ள அனுகுமுறையை கர்த்தர் நமக்கு கற்றுத் தருவார். நிச்சயம் உங்கள் ஜெபம் கேட்கப்பட்டு உங்கள் குடும்பத்தில் பிள்ளைகள் மூலம் சமாதானம் நிம்மதி உண்டாகும்.

### 4) சகல பொருள்களுக்காக (ஆஸ்திகளுக்காக) உபவாசிக்க வேண்டும்

மலையான மொழிபெயர்ப்பில் **ஆஸ்திக்காக** உபவாசம் என்று மொழிபெயர்த்து உள்ளார்.

இது நமக்கு சொத்துக்கள் பெருக வேண்டும். பணம் இன்னும் அதிகம் வேண்டும் என்று அர்த்தம் அல்ல. பண ஆசை எல்லா தீமைக்கும் வேர் (Route) ஆக இருக்கிறது என்று 1தீமோ 6:10 கூறப்பட்டுள்ள (1 தீமோ 5:6) அதனால் கர்த்தர் நமக்கு நம் சமார்த்தியத்தின்படி,

நம் படிப்புக்கு ஏற்றபடி நாம் செய்யும் வேலை அல்லது தொழிலுக்கு தக்கபடி எவ்வளவு கர்த்தர் கொடுக்கிறாரோ அந்த அளவில் நாம் திருப்தி அடையவேண்டும்.

1 தீமோ 6:6ல் போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்று பவுல் கூறுகிறார். நம் பக்கத்தில் உள்ளவர்களை பார்த்தோ அல்லது நம் உறவினர்களை பார்த்தோ பொறாமை கூடாது. அவர்கள் வருமானத்தோடு நம் வருமானத்தை ஒப்பிடக்கூடாது. சிலர் நானும் அவரும் ஒரே படிப்பு, ஒரே ஸ்கூலில் வேலை செய்கிறோம். சம்பள அளவும் எல்லாருக்கும் ஒரே மாதிரிதான் கிடைக்கிறது. ஆனால் அவர்கள் சொந்த வீடு கட்டிவிட்டார்கள், வாகனம் வாங்கிவிட்டார்கள் எனக்கு மட்டும் ஏன் இந்த தரித்திரம் என்று முறுமுறுக்காமல், கர்த்தர் அவனவனுக்கு தந்த அளவிலே வாழ்வதைதான் தெய்வம் விரும்புகிறார்.

ஆனால் இதில் சில வித்தியாசங்களை கவனிக்க வேண்டும். கர்த்தர் **நல்லோர் மேலும் தீயோர் மேலும் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். மழையை வருஷிக்க பண்ணுகிறார், நீதிமான்களின் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழையை பெய்ய பண்ணுகிறார்.** மத். 5:45 நான் இரட்சிக்கப்பட்டவன், அவன் குடிகாரன், பாவம் செய்கிறவன், கர்த்தர் அவனுக்கு ஏன் சூரிய வெளிச்சம் கொடுக்க வேண்டும். அவன் நிலத்துக்கு ஏன் மழையை கொடுக்கிறார். இப்படி சில சமயம் ஒப்பிட்டு பார்த்து சலிப்படைவோம்.

இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால் குடிகாரன் அல்லது பாவம் செய்கிறவனுக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் அதிலே அவனுக்கு நிம்மதி இருக்காது. மழையும், சூரியனும் எல்லாருக்கும் ஒன்றாகத்தான் கர்த்தர் அருளுகிறார். ஆனால் அறுவடை நாள் வரும்போது பாவம் செய்கிறவனுடைய நிலம் மிகப் பெரிதாக இருந்தாலும் கொஞ்ஜமாகத்தான் பலன் கிடைக்கும். ஆனால் இரட்சிக்கப்பட்டவன் நிலம் மிகச் சிறய அளவு நிலமாக இருந்தாலும் அறுவடை சமயத்தில் மிக அதிக நெற்களை அறுவடை செய்வான். இதற்குதான் சிலருக்கு **கிருபை** உண்டு. ஆனால் **ஆசீர்வாதம்** இல்லை என்பார்கள். ஏராளமான நிலம், ஏராளமான பணம், வருமானம் என்பது **கிருபை ஆகும்.** ஆனால் அதை சந்தோஷமில்லாது, சமாதானம் இல்லாது, சாப்பிட எத்தனை விதமான ஆகாரம் இருந்தாலும் ஒன்றையும் சாப்பிட இயலாத நிலையில் பலர் இருக்கிறார்கள். அதைத்தான் ஆசீர்வாதம் இழந்துவிட்டதாக அர்த்தம்.

பலருக்கு **கிருபை** உண்டு, அதாவது **வருமானம்** உண்டு, ஆனால் அதை **அனுபவிக்க முடியாமல் ஆசீர்வாதத்தை இழந்து போகிறார்கள்.**

ஆகாய் 1:6 கூலியை சம்பாதிக்கிறவன். **பொத்தலான பையிலே** போடுகிறவனாய் அதை சம்பாதிக்கிறான். வசனத்தை கவனித்தீர்களா?. எங்கள் குடும்பத்தில் எவ்வளவு **வருமானம்** வந்தாலும் **தரித்திரம் நீங்கவில்லை. ஒரு கடன் தீர்ந்தால் மற்றொரு கடன்.** குடும்பம் **முன்னுக்கே வர முடியவில்லை.**

இது எப்போதுமாறும் என்று பலர் கேட்கிறார்கள். உங்களுக்கு எந்த வகையிலோ **வருமானம்** கிடைக்கிறது, ஆனால் அதில் பணம் சேமிக்க முடியவில்லை. தீர்கன்

கூறுவதைப்போல கஷ்டப்பட்டு உழைக்கிறாய், **கூலியும் கை நிறைய** கிடைக்கிறது. அதை **பையிலே போட்டது தெரியும்.** ஆனால் வீடு வந்து சேர்ந்தபின் பையில் கைவிட்டால் **பணம் அங்கில்லை,** எங்கு போயிற்று? மந்திரமா ? மாயமா? இல்லை **பையில் உள்ள ஓட்டையை நீங்கள் கவனிக்கவில்லை.** அதன் அர்த்தம் ஆசீர்வாதத்தை எப்படியோ இழக்கிறீர்கள். முதலில் **ஓட்டையை கண்டு பிடியுங்கள்.** ஆசீர்வாதம் வீட்டில் யாரால் அதை இழக்க வேண்டி வந்தது. நீங்கள் ஆசீர்வாதத்தை எதனால் இழக்கிறீர்கள்.

இப்படி அவரவர் **தற்பரிசோதனை** நடத்தி **உபவாசித்து ஜெபியுங்கள்.** வானம் அடிக்கடி ரிப்பேர் ஆகிறது. வரும் வருமானத்தில் அதை **ரிப்பேர் செய்யவே** பாதி பணம் செலவகிறது ஏன்? **ஆசீர்வாதம் இழக்கும் ஓட்டையை** கண்டுபிடிக்கத்தான் **சகல பொருள்களுக்காகவும், உபவாசம்** ஜெபம் ஏறெடுக்க வேண்டும் என்று கூறுகிறார். **பசுமாடு** அதில் கிடைக்கும் வருமானம் தொடர்ந்து கிடைக்க **பசுமாடுக்கு வியாதி ஏதும்** வரக்கூடாது. ஆண்டவரே என்று ஜெபிக்க வேண்டும். எங்கள் கம்பெனியில் உள்ள **மிஷின்கள் எதுவும் பழுது** ஆகக்கூடாது ஆண்டவரே என்று சகல பொருள்களுக்காகவும் உபவாசிக்கவும்.

**கிருபை இருந்து ஆசீர்வாதம் இல்லாமல் போனால்**

அந்த குடும்பத்தில் சமாதானம் இருக்காது. வைத்தியத்துக்கே பண சேமிப்பு யாவும் செலவழிக்க நேரும். உபவாச ஜெபம் ஏறெடுங்கள், வீட்டு பொருட்களக்கெல்லாமா உபவாசிப்பது என்ற கேள்வி கேட்பவருக்கு இந்த என் கட்டுரை மூலம் பதில் கிடைத்திருக்கும்.

## 5 செவ்வையான வழியை தேடுவதற்காக உபவாசம்

மலையாளத்தில் சுப யாத்திரைக்காக உபவாசம் We Fast and prayed that he would give us a good journey and protect us. என்று நம்முடைய ஆவிக்குரிய பயனத்தை குறித்து கூறுகிறது. இதன் அடிப்படையில் தான் **பேதுரு** தன் நிரூபத்தில் சபை விசுவாசிகளைப்பற்றி குறிப்பிடும்போது **பரதேசிகளுக்கு** எழுதுவதாவது என்கிறார். விசுவாசிகள் யாவரும் **பரதேசிகள்** (பற்று அற்றவர்கள்) என்று அர்த்தமாகிறது. நாம் யாவரும் பயனித்துக்கொண்டே இருப்பவர்கள். நமக்கு இந்த பூமி சொந்தமானது இல்லை. நாம் நிலையாய் குடியிருக்கும் **பரலோகத்தை** நோக்கி **பயனித்துக்கொண்டிருக்கிறோம். மோட்ச பிரயாணம்** என்ற புத்தகத்தை எழுதிய **ஜான் பணியன்** பரலோக யாத்திரையை குறித்து மிக அருமையாக எழுதியுள்ளார். கிறிஸ்தவ விசுவாசிகள் யாவரும் அந்த புத்தகத்தை கண்டிப்பாக வாங்கி வாசிக்க வேண்டும். நம் பைபிளுக்கு அடுத்தபடியாக மிக அதிக எண்ணிக்கையில் விற்க்கப்பட்ட புத்தகம் **மோட்ச பிரயானம்** ஆகும்.

நம் அவிக்குரிய ஜீவியத்தில் மேடு – பள்ளம் – பிரச்சனை – தடைகள் – வியாதி – சோதனை இப்படி பல பிரச்சனைகளை நாம் யாவரும் நம் வாழ்கையில் சந்திக்காமல் இருக்க முடியாது. **அவைகளை எதிர்பார்த்து** வசனத்தில் விசுவாசித்து கிறிஸ்துவை நமக்கு முன்பாக நிறுத்தி **நமக்கு கொடுக்கப்பட்ட இலக்கை நோக்கி** பயனம்செய்யும்போது அடிக்கடி **நாம் உபவாசித்து ஜெபித்து** பரிசுத்த ஆவியானவரின் பெலத்தோடு நம் **மோட்ச**

**பயனத்தை** தொடர வேண்டும். நம் வேத புத்தகம்தான் நம்மையும் நம் **குறைகளை** சுட்டிக்காட்டும் **முகம் பார்க்கும் கண்ணாடி.** நம் **வேத புத்தகம்தான்** நம் ஜீவியத்துக்கு **வழிகாட்டி ஆகும். சபை உபதேசங்கள்** நமக்கு **வழி காட்டி அல்ல. வேத வசனம்** மட்டுமே நமக்கு வழி காட்டி ஆகும். ஆகவே நம் ஒவ்வொருவருடைய வாழ்கையிலும் **உபவாச ஜெபம்** மிக அவசியம். **எஸ்ரா தீர்க்கதரிசி** கடைசியாக கூறியதை கவனியுங்கள். எஸ்ரா.8:23 அப்படியே நாங்கள் **உபவாசம் பண்ணி** எங்கள் தேவனிடத்தில் அதை தேடினோம். **எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டு அருளினார்.** எத்தனை **மங்களமான முடிவு** என்பதை அறியுங்கள்.

☐ முடியவாக நான் கூற விரும்புவது உபவாச ஜெபம் என்பது நம் இஷ்டம்போல் ஜெபிக்க கூடாது. வேத வசனத்தில் பல ஒழுங்குகள், சட்ட திட்டங்கள் உண்டு. அதை கவனித்து உபவாசித்து ஜெபியுங்கள் வெற்றி நிச்சயம்.

☐ மேலும் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால். சாதாரண ஜெபத்துக்கு பிசாசு பெரிய தடைகளை உண்டாக்க மாட்டான். ஆனால் நீங்கள் **உபவாசித்து ஜெபிக்க** போகிறீர்கள் என்றால் அவனுக்கு **பயமும் கோபமும்** அதிகமாகும். ஆகவே நிறைய **தடைகளை** உண்டாக்குவான். **சொந்த வீட்டிலேயே பல தடைகள்.** கணவன்–மனைவியால் உண்டாகும், பிள்ளைகளால் தடைகள் உண்டு. திடீர் என்று உங்கள் வீட்டுக்கு வரும் **விருந்தினர்களால்** வருவார்கள். இப்படிப்பட்ட பல தடைகளை உண்டு பண்ணுவான்.

☐ சிலர் சொல்ல கேட்டிருக்கிறேன். உபவாசம் எடுக்கும்போது எனக்கு **தலைவலி** உண்டாகிறது என்கிறார்கள். நான் டாக்டர் என்ற முறையில் கூறினேன், இந்த தலைவலி **எல்லோருக்கும் உண்டாகும்.** சாப்பிடாவிட்டால் சிலருக்கு தலைவலி லோசாக உண்டாகும். அதன்பின் சரியாகிவிடும். ஆகவே இதெல்லாம் உபவாச ஜெபம் செய்ய சொல்லப்படும் சாக்குபேக்குகள் ஆகும்.

## இரண்டு பேர் உபவாசம் எடுக்கக்கூடாது

1) அதிக **சர்க்கரை வியாதி** உள்ளவர்கள். குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிடாமல் பேனால் **கைகள் நடுக்கம் ஏற்படும்.** சிலருக்கு **மயக்கமும்** உண்டாகும். ஆகவே அப்படிப்பட்ட வியாதி உள்ளவர்கள் உபவாசிப்பது நல்லது அல்ல.

2) வயிற்றில் **அமிலம் அதிகம் சுரப்பதால் வயிறு எரிச்சல்** உள்ளவர், **வயிற்றில் புண்** (ULCER) உள்ளவர்கள் சாப்பிடாமல் இருந்தால் வயிற்று புண் அதிகமாகும். **இந்த இரண்டுவித பிரச்சனை உள்ளவர் உபவாம் செய்ய கூடாது.**

என்றாலும் **மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.** எத்தனையே முறை வீட்டில் உண்டான பிச்சனையினால் **சாப்பிட மாட்டேன்** என்று **பிடிவாதம்** செய்து சாப்பிடாமல் இருந்தவர்கள் உண்டு. **உபவாச ஜெபம்** என்றால் மட்டும் சாக்கு போக்கு கூறி உபவாசத்தை தவிர்ப்பார்கள். ஆசீர்வாதம் சும்மா கிடைக்காது !

☐ கடைசி ஆலோசனையாக கூறுவது. நாளை உபவசம் செய்து ஜெபிக்க போகிறீர்கள்

என்றால் அதற்கு **முதல் நாள் ஆயத்த ஜெபம்** செய்வது மிக அவசியம். கர்த்தாவே நாளை நான் **உபவாச ஜெபம்** செய்து **உம்மோடு நிறைய காரியங்கள்** பேச வேண்டும், எனக்கு **தடைகள்,** சரீர **பலவீனங்கள்** ஒன்றும் நேராமல் இருக்க உதவி செய்யும் என்று **ஆயத்த ஜெபம்** செய்துவிட்டு மறுநாள் உபவாசம் செய்து பாருங்கள். கர்த்தர் உங்களுக்கு பெலன் தருவார். **உபவாச ஜெபத்துக்கு** உங்களுக்கு பதில் கிடைக்கும். தெய்வ கிருபை உங்களோடு இருப்பதாக.

# ONLINE பிரசங்கம்

வாசகர்கள் பலர் என்னை Online (Zoom)ல் பிரசங்கம் செய்ய வேண்டும் என்று வர்புறுத்தகறார்கள். கன்வென்ஷன் இல்லை, ஆராதனையும் இல்லை. உங்களையும் உங்கள் வேத பாட செய்திகளையும் கேட்கவும், உங்களை நேரில் பார்க்கவும் ஆவலாக இருக்கிறது என்று தமிழ்நாட்டிலும் கேரளத்திலும், வெளி நாடுகளிலும் நிறைய விசுவாசிகள் விரும்புகிறார்கள். வெளி நாடுகளில் உள்ளவர்களுக்கும் அந்தஏற்பாடு பயன்படும் என்றார்கள். நல்ல ஆலோசனைதான். ஆனால் அதற்கான வசதி என்னிடம் இல்லை. என் மனைவியிடம் Whatsapp உண்டு. என் பேரப்பிள்ளைகள் இரண்டு பேர் Online வகுப்புக்காக அதிகாலை முதல் மலை வரை உபயோகிக்கிறார்கள்.

மேலும் Online (Zoom) வழியாக நான் பிரசங்கிக்க எனக்கு கடினமாக தோன்றுகிறது. ஒரே முறை திருவனந்தபுரம் Dr. பிரேம் சுதாகர் அவர்களின் Trivandram Churchன் ஆராதனையில் பங்குகொண்டேன். அதை தொடர்ந்து பங்குகொள்ள முடியவில்லை.

. . . . . . FMPB மிஷனரி ஸ்தாபனத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி ½மணி நேரம் செய்திபகிர்ந்து கொண்டேன். அதுவும் என்னிடம் Zoom வசதி இல்லாததால் அவர்களே லேப் டாப் கொண்டுவந்து என் முன் வைத்து ½மணி நேரம் பேசியது எனக்கு புது அனுபவமாக இருந்தது என்றாலும் Netல் சில தடைகள் ஏற்பட்டது. இடையில் **நெட் சரியாக வேலை செய்யவில்லை.** நான் கண்களை மூடிக்கொண்டு 3½ மணி நேரம் பேச முடியும். ஆனால் கண்களை திறந்து பேசுவது கடினம். மேலும் பிரசங்கத்தில் இடையில் **தடை ஏற்பட்டால்** என் எண்ணங்களிலும் பிரசங்கத்திலும் தடை ஏற்படும். தொடர்ச்சி விடுபடும். அப்படி ஒரு பலவீணம் எனக்குண்டு. அதன் பிறகு பிரசங்கம் தொடர்வது கடினம். எப்படியோ FMPB சகோதரர்கள் நெட் சரியாகிவிட்டது, பேசுங்கள் என்றார்கள். அதன்பின் எப்படியோ பேசி முடித்தேன். இப்படிப்பட்ட விஷயத்தில் என்கு சாமர்த்தியும் இல்லை என்பதை ஒத்துக்கொண்டேயாக வேண்டும். சத்திய வசன TV நிகழ்ச்சிக்காக 18 நிமிட பிரசங்கம் செய்ய முடியாமல் தவித்தது எனக்குத்தான் தெரியும். அவர்களும் மறுபடியும் TVயில் பேச என்னிடம் கேட்டு சலித்து போனார்கள்.

ஜெபித்துக்கொள்ளுங்கள். கொரோனா தாக்கம் சுமார் இரண்டு வருடம் நீண்டு போகும் என்றாலும் கொஞ்ஜ கொஞ்ஜமாக ஆலய வாசல் திறக்கப்பட அரசாங்கம் அனுமதிக்கும் என்று நம்புகிறேன். வாகனங்கள் ரயில் எப்போது ஓட அனுமதிக்கிறார்களோ அப்போதுதான் நாட்டில் சகஜநிலை திரும்ப சாத்திய கூறுகள் உண்டு. Online பிரசங்கிக்க கேட்டுக்கொண்ட யாவருக்கும் நன்றி கூறிகிறேன்.

## ONLINE BANKING (NEFT)

**Dr MGE PUSHPARAJ**, **SALEM - 636 005. INDIA**

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842** IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

SWIFT CODE - SBININBB637- 10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.** IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

SWIFT CODE - CNRBINBBSLM -1219101013622.

**JULY - 2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.